

விழுப்புரம் நகர துணை செயலாளர் வி. புருஷோத்தமன் எம். சி திருமண விழாவில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மற்றும் திருமதி.விசாலாட்சி பொன்முடி ஆகியோர் மணமக்களை வாழ்த்தினார்கள். விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ., கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், ஒன்றியச் செயலாளர்கள் க.மும்மூர்த்தி, தே.முருகவேல் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் - சேர்த்தல் பணியில் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் அறிக்கை!

தூத்துக்குடி,அக்.26-

தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் உள்ள திருச்செந்தூர், ஓட்டப்பிடாரம், ஸ்ரீவைகுண்டம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் உள்ள வாக்குச்சாவடி எண்கள் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள புதியவாக்காளர் பட்டியலில் திருத்தம் செய்வது, இடமாற்றம் செய்வது, இறந்தவர்கள் மற்றும் நிரந்தரமாக வெளியூரில் உள்ள வாக்காளர்களை நீக்கம் செய்வது ஆகிய பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் 01.01.2024 அன்று 18 வயது பூர்த்தியாக வுள்ள புதியவாக்காளர்களை அவசியம் சேர்க்க வேண்டும். புதியதாகபெயர் சேர்ப்பதற்கு படிவம் 6,ஆதார் விபரம் சேர்ப்பதற்கு 6பி, பெயர் நீக்கம் செய்வதற்கு படிவம் 7,எழுத்துப்பிழை,முகவரி மாற்றம் செய்தல் மற்றும் புதியவாக்காளர் அடையாள அட்டை பெறுவதற்கு படிவம் 8 பூர்த்தி செய்து 27.10.2023 முதல் 12.12.2023 வரைவாக்குச்சாவடி மையங்கள் அல்லது வாக்காளர் சேர்ப்பிற்கானதாசில்தார் அலுவலகத்தில் வழங்கலாம் என்று மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டுள்ளார்.



ஈரோடு தெற்கு மாவட்டக் கழக மாணவரணி, இளைஞரணி, மருத்துவணிகளின் சார்பில் நீட் தேர்வு மசோதாவை எதிர்த்து மாபெரும் கையெழுத்து இயக்கம் ஈரோடு பூந்துறை ரோடு எ.ஆர்.ஆர். திருமண மண்டபத்தில் ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான சு.முத்துசாமி துவக்கி வைத்து உரையாற்றினார். நிகழ்வில் நிர்வாகிகள் எம்.கந்தசாமி, எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், வி.சி.சந்திரகுமார், கே.இ.பிரகாஷ், வீரமணி, மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம், இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் ஜெ.திருவாசகம் உள்ளிட்ட மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய கழகச் செயலாளர்கள், பகுதி கழக செயலாளர்கள், பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து அணிகள் நிர்வாகிகள், வார்டு, ஊராட்சி கழக நிர்வாகிகள், மாணவர்கள், பொதுமக்கள் பலர் திரளாக கலந்து கொண்டார்கள்.

### நெல்லையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க வருகை தரும்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு மாபெரும் உற்சாக வரவேற்பு!

## இரா.ஆவுடையப்பன்- டி.பி.எம்.மைதீன்கான் வேண்டுகோள்!

நெல்லை, அக்.26-

நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் ஆகியோர் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை விவரம் வருமாறு:-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நெல்லை கிழக்கு, மத்திய மாவட்ட கழகத்தின் சார்பாக நாளை (27.10.2023 - வெள்ளிக் கிழமை) காலை 9 மணிக்கு கே.டி.சி.நகர் பாலம் அருகே கலைஞர் நூற்றாண்டு விழா திடலில் நடைபெறும் கழக இளைஞர் அணி செயல் வீரர்கள் கூட்டம் மற்றும் அன்று காலை 11 மணி அளவில் கே.டி.சி.நகர் மாதா மாளிகையில் நடைபெற உள்ள கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சி ஆகிய நிகழ்ச்சிகளில் பங்கேற்று சிறப்பிக்க வருகைதரும் கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (26.10.2023- வியாழன்) மாலை 7 மணி அளவில் திருநெல்வேலி மாவட்டத்திற்கு வருகை தர உள்ளார்கள்.

அமைச்சராகப் பொறுப்பேற்று முதன்முறையாக திருநெல்வேலிக்கு வருகை தருகின்ற உதயநிதி ஸ்டாலின் அவர்களை வரவேற்பதற்காக ஒருங்கிணைந்த மாவட்ட கழகத்தின் சார்பில் தாழையூத்து பண்டாரகுளம் அருகில் மிகச் சிறப்பான வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### மங்கள இசை, திருமுறை தேவாரப் பாடல்களுடன் விழா!

# மாமன்னன் ராஜராஜ சோழனின் 1038ஆம் ஆண்டு சதயவிழா!

## 1038 பரதநாட்டிய கலைஞர்கள் பங்கேற்கும் மாபெரும் நாட்டிய நிகழ்ச்சி


தஞ்சை, அக். 25-

**தஞ்சை பெரிய கோயிலில் மாமன்னன் ராஜராஜ சோழனின் 1038ம் ஆண்டு சதயவிழா நேற்று முன்தினம் காலை மங்கள இசை, திருமுறை தேவாரப்பாடல்களுடன் விழா நடைபெற்றது.**



தமிழர்களின் கட்டிடக் கலைக்கும், சிற்ப கலைக்கும் எடுத்துக்காட்டாக திகழ்ந்து வரும் உலகப் புகழ் பெற்ற தஞ்சை பெரியக் கோவிலை எழுப்பிய சோழப் பேரரசன், மாமன்னன் இராஜராஜ சோழன் ஐப்பசி மாதம் சதய நட்சத்திரத்தில் பிறந்தார். மாமன்னன் இராஜராஜன் பிறந்தநாள், ஆண்டுதோறும் சதய விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி 1038ம் ஆண்டு சதய விழாவின் முதல் நாள் நிகழ்ச்சி நேற்று முன்தினம் காலை மங்கள இசையுடன் துவங்கியது. தொடர்ந்து களிமேடு அப்பர் அவையினரின் தேவாரம், திருவாசகம் இசைக்கும் திருமுறை அரங்க நிகழ்ச்சி நடைபெற்றது.

இதனையடுத்து தஞ்சை மாவட்ட ஆட்சியர் தீபக் ஜேக்கப் தலைமையில் தமிழ் அறிஞர்கள், தொல்லியல் துறை அறிஞர்கள், வரலாற்று ஆய்வாளர்கள், கல்வெட்டு ஆய்வாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்கும் மாமன்னன் குறித்த சிறப்பு கருத்தரங்கமும், 1038 பரதநாட்டிய கலைஞர்கள் பங்கேற்கும் மாபெரும் நாட்டிய நிகழ்ச்சியும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், சதயவிழா குழு தலைவர் செல்வம், அறங்காவலர் பாபாஜி ராஜா போன்ஸ்லே, துணை மேயர் அஞ்சுகம் பூபதி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். சதயவிழாவைக் காண்பதற்காக ஏராளமான வெளிநாட்டினரும் தஞ்சையில் குவிந்துள்ளதால், நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது.



சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூரில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைந்துள்ள மருதுபாண்டியர்கள் நினைவு மண்டபத்தில், நேற்று முன்தினம் (24.10.2023) மருதுபாண்டியர்களின் 222வது நினைவு தினத்தை முன்னிட்டு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் மருதுபாண்டியர்களின் திருவுருவச்சிலைக்கு அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் உள்ளனர்.